## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **எல்கேஏஎஸ் 01 - நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்:**<br><br>எல்.கே.ஏ.எஸ். 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் என்பதற்கு முரணாக முறையே ரூபா 8,562,252 தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகளும் ரூபா 247,182,859 தொகையான கடன்கொடுத் தோர் வரவு மீதிகளும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்தக் கணக்கு களின் முறையே வரவு மற்றும் செலவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, நடைமுறைச் சொத்துக்களும் நடை முறைப் பொறுப்புக்களும் முறையே ரூபா | கடன்பட்டோர்களின் ரூபா 8,562,252 தொகையான செலவு மீதிகள் எதிர்கால நிதிக் கூற்றுக்களில் தனித்த னியாக இனங்காணப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுகுவதனை கூட்டுத் தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அசாதாரண மீதிகளை கணக்கிணக்கம் செய்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 8,562,252 மற்றும் ரூபா 247,182,859 தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | | |
| (ஆ) **எல்கேஏஎஸ் 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**<br><br>எல்கேஏஎஸ் 08 இன் 45 மற்றும் 49 ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஒப்பீட்டுத் தகவல்கள் திருத்தியமைக்கப்படாததுடன் மீளாய்வாண்டிற்கான உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,335,613 தொகையான முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் தொடர்பில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுச் சீராக்கல்கள் எதிர்கால நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக<br>வெளிப்படுத்தப்படும். | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டுமென்பதுடன் அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) **எல்கேஏஎஸ் - 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br><br>முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 7,665,759, ரூபா 11,838,574, ரூபா 122,478,704, ரூபா 180,936,809 மற்றும் ரூபா 63,041,070 கிரயமான முறையே கணனி பாகங்கள் மற்றும் மென்பொருட்கள், அலுவலகத் தளபாடங்கள், இயந்தி ரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் எல்கேஏஎஸ் - 16 இன் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை மதிப்பிடாமலும் அதற்க மைய கணக்கீடு செய்யப்படாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடரச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | நிலையான சொத்துக்களை மீள விலைமதித்தல் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்றது. | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்தல் வேண்டும். |
| (ஈ) **ஸ்எல்எ.்.ப்ஆர்எஸ் 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**<br><br>கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரிமையுடைய துணைக்கம்பனியான திவ்கோசா (பிரைவட்) லிமிடட் நீண்டகால மாக செயற்படாதுள்ளதுடன் இக் கம்பனியை கலைப்பதற்கு 2006 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானித் திருந்தது. கலைக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்திய டையாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் ஒன்றித்த நிதிக்கூற் றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு தேவ்கோஷோவா (தனியார்) லிமிடெட் நீண்ட காலமாக இயங்காத கம்பனியாக இருப்பதனால் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கப்ப டவில்லை. கலைத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஆகையால், கலைத்தல் செயற்பாட்டின் போது பெறத்தக்க நிலுவைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டுத்தாபனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 669,791,349 தொகையான ஐயக்கடன் ஏற்பாட்டுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐயக்கடன் ஏற்பாட்டுக்காக பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையை எதிர்கால நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 இன் 13 ஆம் இலக்க திருத்திய பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் படி, ரூபா 64,158,593 மற்றும் ரூபா 13,654,032 தொகையான முறையே பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்ஈ) மற்றும் அதன் மீதான மிகைஅறவீடு என்பன செலுத்தப்பட்டோ அல்லது 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டோ இருக்கவில்லை. | எதிர்கால நிதிக் கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனம் 2015 இன் 13 ஆம் இலக்க திருத்திய பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்துடன் இணங்குதல் வேண்டுமென்பதுடன் செலுத்த வேண்டிய தொகைகள் நிதி கூற்றுக்களிற்கு கொண் டுவரப்படுதல் வேண்டும் |
| (ஆ) ரூபா 79,332,387 தொகையான பணிக்கொடை ஏற்பாடானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிப்பிடப்படாது 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்கால நிதிக் கூற்றுக்களில் இதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடை ஏற்பாட்டின் செவ்வைத் தன்மை யை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) இருப்புச் சீராக்கத்தின் மீதியான ரூபா 19,348,787 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இருப்புச் சீராக்க மீதி ரூபா 8,573,794 வரவு மீதி வரை சரிசெய்யப்பட்டதுடன் மீதியை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இருப்புச் சீராக்கக் கணக்கு சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) 2019 இல் காணப்பட்ட ரூபா 234,194,581 ஒட்டுமொத்த கடன்கொடுத்தோர் தொகை இனை முன்னைய ஆண்டுச் சீராக்கல் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் உப ஒப்பந்த செலவினத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால், விற்பனைக் கிரயம் குறைத்தும் மொத்த நட்டம் அதிகரித்தும் கூறப்பட்டிருந்தன. | இதன் பின்னர் முன்னைய ஆண்டுச் சீராக்கத்திற்கான கணக்கீட்டுப் பரிகாரம் பின்பற்றப்படும் | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுப் பரிகாரங்களின் செவ்வைத் தன்மை மற்றும் நம்பகரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) நிர்மாண உத்தரவாத நிதியத்தின் கடன் மீதி | 20,800,000 | கடன் உடன்படிக்கை | கடன் உடன்படிக்கைக்குப் பதிலாக உறுதிப்படுத்தும் ஆவணம் எம்மடமுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொகைகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி ஏற்றுக் கொள்வதற்காக அனைத்து ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கடன்கொடுத்தோர் மீதி | 43,829,527 | தனிப்பட்டோர் பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | மேற்படி மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) நாணயக் கடித எல்லைக் கணக்கு | 114,127,998 | விபரமான பட்டோலை | இடைக்கால கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பின்னிணைப்பாக விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும். | |
| (ஈ) உப ஒப்பந்த முற்பணங்கள் | 15,299,042 | விபரமான பட்டோலை | இடைக்கால கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பின்னிணைப்பாக விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும். | |
| (உ) வியாபாரக் கடன்கொடுத்தோர் - வேலைத்தளம் | 69,515,187 | வயதுப் பகுப்பாய்வு | மேற்படி மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) சில்லறைக் கடன்கொடுத்தோர் | 1,356,639 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | மேற்படி மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் | 1,201,004 | விபரமான பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | இடைக்கால கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பின்னிணைப்பாக விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும். | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 609,829,608 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 03 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது. ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தவிர்த்து அந்தக் கடன்பட்டோர்களை அறவிடுவதற்காக பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சியுள்ள பெறவேண்டிய தொகைகளை சேகரிக்கும் செயன்முறையில் கூட்டுத் தாபனம் ஈடுபட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதி களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பூரணப்படுத்திய 05 நிர்மாணச் செயற் திட்டங்கள் தொடர்பில் பெறப்பட்ட ரூபா 19,177,978 தொகையான வேலை ஆரம்பித்தல் முன்பணம் 2020 நவம்பர் 31 இல் உள்ளவாறு 2018 முதல் தீர்க்கப் படாமல் கணக்குகளில் வைக்கப்பட் டுள்ளன. | பிடிகாசு விடுவிக்கப்பட்ட பின்னர் வேலை ஆரம்பித்தல் முன்பணங் களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரித்த கடன் எல்லையை மீறி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,831,519 தொகையான வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டிருந்தது. | அங்கீகரித்த கடன் எல்லை யை மீறி வங்கி மேலதிகப் பற்று பெறப்பட்டிருப்பத ற்கான காரணம் கடன் மீதான வட்டியாகும். வுாடி க்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய கொடுப்பன வுகள் தாமதம் அடைந்திரு ந்ததன் காரணமாகவே வங்கி மேலதிகப்பற்று தீர்க்கப்படாமல் உள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (ஆ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கடன் மீதி ரூபா 1,420 மில்லியன் ஆனதுடன், அந்தக் கடனுக்கான வட்டிச் செலவினம் ரூபா 164,565,105 ஆகும். இந்த வட்டிச் செலவினம் ஆண்டிற்கான மொத்த நிதிச் செலவினத்தில் 78 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. | தொழிற்படு மூலதனத் தேவைகளிற்காக கடந்த ஆண்டுகளில் பெருமளவு வங்கிக் கடன்களை பெற வேண்டிய நிலை கூட்டுத் தானத்திற்கு ஏற்பட்டிருந்த துடன் அதன் விளைவாக பெருமளவான வங்கிக் கடன் வட்டியை கூட்டுத் தாபனம் செலுத்த வேண் டியிருந்தது. | பொருத்தமான உபாய வழிகளை கையாண்டு வட்டிச் செலவினத்தை இழவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பாதிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,002.64 மில்லியன் ஆன போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான உள்ளபடியான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 85.18 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியில் காணப்பட்டது. இது பாதிடப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 108 சதவீதக் குறைவாகும். | கொவிட் 19 நிலமை காரணமாக நிர்மாண வேலைகளிற்கு ஏற்பட்ட அதிக கிரயம் மற்றும் கூட்டுத்தாபனம் எதிர் கொண்டுள்ள நிதிச் சிக்கல் கள் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கு பாதிடப்பட்ட இலாபத்தையும் பாதிடப் பட்ட காசுப் பாய்ச்சலையும் அடைய முடிந்திருக்க வில்லை. | திட்டங்களிற்கு அமைய செயற்படுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 942,436,927 மற்றும் ரூபா 6,342,105 தொகையான முறையே பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பத்து ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாமல் வைக்கப்பட்டுள் ளன. | கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதிச் சிக்கல்கள் காரணமாக பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாமல் வைக்கப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள் ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனம் வரிச் சட்டங்களுடன் இணங்கு தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் செயற்பாடுகள் ரூபா 257,420,711 வரிக்குப் பிந்திய நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய நட்டம் ரூபா 843,901,384 ஆக காணப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 586,480,673 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனைகள் கிரயத்தில் ஏற்பட்ட குறைவு மற்றும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ரூபா 137.28 மில்லியன் பெறுமதியான நான்கு பாலங்களின் நிர்மாண வேலைகளையும் ரூபா 361.74 மில்லியன் பெறுமதியான ஒன்பது கட்டிட நிர்மாண வேலைகளையும் | கொவிட் 19 நிலமை காரணமாக அதிகளவு செயற்பாட்டுக் கிரயம், வேலை ஆரம்பித்தல் முற்ப ணங்களின் தாமதம், | எதிர்பார்க்கப்பட்ட திட்டங் களிற்கு அமைவாக செயற்திட்ட வேலைகளை பூரணப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான செயன் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் சுற்றாடல் பிரச்சினை கள் ஆகியனவே 2020 ஆம் ஆண்டில் உள்ளபடியான மற்றும் பாதிடப்பட்ட செயற் திட்ட வேலை மட்டங்க ளிற்கு இடையே காணப்பட்ட வேறுபாட்டிற்கான காரணங் களாகும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய வீடமைப்பு அதிகாரசபை யிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1,572.65 மில்லியன் பெறுமதியான 16 பாலங்களின் நிர்மாண வேலைகளை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டி ருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் கூட அந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அவற்றில் 08 நிர்மாண வேலைகளின் பௌதீக செயன் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | கொவிட் 19 நிலமை காரணமாக அதிகளவு செயற்பாட்டுக் கிரயம், வேலை ஆரம்பித்தல் முற்ப ணங்களின் தாமதம், கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் சுற்றாடல் பிரச்சினை கள் ஆகியனவே 2020 ஆம் ஆண்டில் உள்ளபடியான மற்றும் பாதிடப்பட்ட செயற் திட்ட வேலை மட்டங்க ளிற்கு இடையே காணப்பட்ட வேறுபாட்டிற்கான காரணங் களாகும். | எதிர்பார்க்கப்பட்ட திட்டங் களிற்கு அமைவாக செயற்திட்ட வேலைகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மொத்தம் ரூபா 830.97 மில்லியன் தொகையான 8 கட்டிட நிர்மாண செயற்திட்டங்களும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்ட ங்களும் எவ்வித செயன் முன்னேற் றமும் இன்றிக் காணகப்பட்டன. | குறைந்தளவு நிதி ஒதுக்கீடு காரணமாக அவை எவ்வித செயன் முன்னேற்றமும் இன்றிக் காணகப்படுகின் றன. | எதிர்பார்க்கப்பட்ட திட்ட ங்களிற்கு அமைவாக செயற்திட்ட வேலை களை பூரணப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 செயற்திட்ட வேலைகளிலிருந்து ரூபா 186,279,697 தொகையான மொத்த நட்டம் இனங்காணப்பட்டிருந் தது. | 1124, 1153 மற்றும் 1185 ஆகிய செயற்திட்டக் குறியீடுகள் இலாபத்தை ஈட்டித் தந்திருந்தன. கூட்டு த்தாபனம் எதிர் கொண்டு ள்ள நிதிச் சிக்கல், செயன்முன்னேற்றத் தாமதம், குறைந்தளவு நிதி ஒதுக்கீடு மற்றும் அதிக செயற்பாட்டுக் கிரயம் காரணமாக ஏனைய செயற்திட்டங்கள் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. | செலவினத்தை இழிவு படுத்துவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |

### 3.2 குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 67,133,489 பெறுமதியான பயன்படுத்த முடியாத மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இரத்மலானை தலைமை அலுவலக வளவில் வைக்கப்பட்டுள்ளன. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தச் சொத்துக்கள், பழுதுபார்க்க ப்பட்டு வரப்படுகின்ற அல்லது பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுகின்றன. | சொத்துக்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்ப டுவதனை உறுதிப்படுத் துதல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 491 ஆகவிருந்த அதேநேரம் உள்ளபடி யான பதவியணி 594 ஆகவிருந்தது. அதற்கிணங்க இது கூட்டுத்தாப னத்தின் பல்வேறு பதவிகளிற்கு 103 ஊழியர்களின் மிகையான ஆட்சேர்ப்பை காட்டுகின்றது | 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்கு தேவைப்பட்ட ஊழியமே இதற்கான காரணமாகும். | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சிவில் பொறியியலாளர் களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 19 ஆன போதிலும், ஒப்பந்த அடிப்ப டையின் கீழ் 50 சிவில் பொறியிய லாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவிய ணியினை விஞ்சி 28 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப் பட்டுள்ளனர். | 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்கு தேவைப்பட்ட ஊழியமே இதற்கான காரணமாகும். | கால அடிப்படையில் மீளாய்வினை மேற்கொ ண்டு நெகிழ்வுத் தன்மை யான பதவியணி மட்டங் களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |